1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெந்நீர் வைத்துக் கொடுப்பதற்கெனச் சமையலறை கட்டுவதற்கான செலவுக்கு இந்த அரசுக்கு இன்றைய நிலையில் நிதி வசதி இல்லை. அடுத்து, சிவகங்கையில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. இந்த பாகனேரி மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் சாதாரணப் பிரசவம் போன்றவற்றிற்கு வருகின்ற நோயாளிகளைக் கவனிக்கின்ற நிலையில்தான் இருக்கிறது. அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த நோயாளிகளைச் சிவகங்கை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். தென்னரசு : தலைவரவர்களே, சிவகங்கை மருத்துவ மனை, இந்த அரசாங்கத்தின் பெரு முயற்சியால் கட்டப்பட்டதாகும். இந்த மருத்துவ மனையைச் சுற்றிலும் சுகாதாரக் குறைவான தேநீர்க் கடைகள் இருப்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்தக் கடைகளை அரசு ஆர்ஜிதம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபற்றி அந்தத் துறைக்குத் தெரிவிக்கப்படும்.

Madurai Medical College.

* 132 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of Assistant Reader in Pharmaceutics, Pharmacognosy and non-Medical Assistant in Pharmacology are lying vacant in the Madurai Medical College;

(*b*) if so the period for which they are kept unfilled; and

(*c*) the reasons therefor?

மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருந்து தயாரிப்பு இயல் (Pharmaceutics) மருந்து ஆய்வியல் (Pharmacognosy) ஆகிய துறைகளில் ஆராய்ச்சித் துறை உதவித் துணைப் பேராசிரியர் பதவிகளும், மருந்தியலில் மருத்துவம்

[1972 ஆகஸ்ட் 21

சாராத உதவியாளர் பதவியும், மதுரை மருத்துவக் கல்லூரியில் காலியாகவுள்ளனவா?

(இ) ஆம் எனில், எவ்வளவு காலமாக அவை காலியாக வுள்ளன?

(உ) அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : இக்கேள்வி 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாளன்று கேட்கப் பட்டது. மருந்து ஆக்க இயல் ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர் பதவியும், மருந்துப் பொருளியல் பேராசியருக்கு மருத்துவச் சார் பற்ற உதவியாளர் பதவியும் அந்த தேதியில் காலியாக இல்லை. மருந்து ஆக்க இயல் ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர் (Assistant Reader in Pharmaceutics) பதவி 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் முதல் காலியாக இருந்தது. அது 1972-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9-ம் நாளன்று நிரப்பப்பட்டது.

(உ) நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு அப்பதவிக்குரியவரை முன்னதாக நியமிக்க இயலவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் பார்மசி படிப்பை மூடிவிட்டு எல்லாவற்றையும் மதுரைக்குக் கொண்டுபோகிற காரணத்தால், பார்மசித் துறையின் பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் ஆகியவர்களின் பதவிகள் குறையுமா என்று அமைச்சர் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முதல் கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழுவில்லை. ஒரு மருந்தில் இன்னொரு மருந்தைக் கலக்கக் கூடாது. (சிரிப்பு)

Cattle Dung Cakes

*133 Q.—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of drying of cattle dung cakes on the roads in Madras City ; and

(*b*) if so, the steps taken to prevent this nuisance?